உற்பத்தியின் தன்மை	அம்சங்களும் நன்மைகளும்	ஆரம்ப வைப்பும் கட்டணங்களும்	கணக்கைத் திறப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்	முக்கிய விதிமுறைகளும் நிபந்தனைகளும்
Lien நடைமுறைக்கு கணக்கு குறித்த கணக்கிலுள்ள நிதிக்குரிய பற்றுரிமையை செயற்படுத்தக் கோரும் பதிவுசெய்யப்பட்ட வணிகங்களுக்கு மிகச் சிறந்ததாகும். இக்கணக்கு உத்தரவாத நிதித் திட்டங்களுடன் நிறுவனத்தின் எளிதான செயற்பாட்டிற்கும் அவசியமானதாகும்.	• ஆரம்ப வைப்பு தேவையில்லை • ஆகக் குறைந்த மீதி தேவையில்லை • மேலதிகப் பற்று வசதியில்லை. • காசோலைப் புத்தகம் வழங்கப்படாது. • கணக்குரிமையாளருக்கு இலவச SMS அறிவிப்பு. • கணக்குரிமையாளருக்கு மின்னஞ்சல் ஊடாக மாதாந்த கூற்றுகள் • CGF இற்கு தபால் மூலமாக மாதாந்த கூற்றுகள் • டெபிட் அட்டை, இணைய வங்கியில் வசதி அல்லது டிஜிற்றல் பரிமாற்ற வசதிகள் இல்லை • வைப்பு மீதிக்கு எதிராக முற்பணங்கள் வழங்கப்படாது • பற்றுரிமையாளர் lien நடைமுறைக் கணக்கிலுள்ள நிதித் தொடர்பான பற்றுரிமையினைக் கொண்டுள்ளார். • கணக்குரிமையாளரின் கோரிக்கை மற்றும் பற்றுரிமையாளரின் முன்னனுமதி என்பவற்றின் ஊடாகவே அனைத்து மீளப்பெறல்களும் கொடுப்பனவுகளும் நிறைவேற்றப்பட வேண்டும்.	• ஆரம்ப வைப்பு தேவையில்லை • தரகும் கட்டணமும் கணக்கிலிருந்து (டெபிட்) மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பணப் பரிமாற்றத்திற்கும் தரகு அறவிடப்படும். பரிமாற்றம் சென்றடையும் கணக்கு * | பரிமாற்ற பெறுமதிக்கான தரகு % | ஆ.கு.தரகு (ரூ.) | ஆ.கூ.தரகு (ரூ.) BOC நடைமுறைக் கணக்கு | 0.75% | 1,000 | 100,000 ஏனைய வங்கியின் நடைமுறைக் கணக்கு | 1% | 2,000 | 150,000 * பற்றுரிமைக் கணக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட அனைத்து நிதியையும் வரவு வைப்பதற்கு வாடிக்கையாளர் பரிந்துரைத்த சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கு. • தரகு வாடிக்கையாளரின் பணம் சென்றடையும் கணக்கிலிருந்து (BOC கணக்குகளுக்கு) தனியாக அறவிடப்படும் • சேமிப்புக் கணக்கு வேறொரு வங்கியில் இருந்தால், நிதியை பரிமாற்றம் செய்வதற்கு முன் தரகு கழிக்கப்படும். **கணக்கைப் பேணுதலும் பிற கட்டணங்களும்** https://www.boc.lk/rates-tariff#general-tariff for the fee amount என்ற இணைப்பை பார்வையிடவும். • வரிகள் – இலங்கை அரசாங்கம் மற்றும்/அல்லது ஒழுங்குமுறை அதிகாரசபை அல்லது வங்கியால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்டப்பூர்வ வரிகள்	- தனி உரிமையாளர் - பங்குடைமையாளர் - பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள் இக்கணக்கினை திறக்கலாம் - கட்டுமான உத்தரவாத நிதியத்தில் (CGF) பதிவுசெய்திருத்தல் - தற்போதைய அல்லது புதிய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் **கணக்கைத் திறப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்** • **கணக்கைத் திறப்பதற்கு அவசியமான ஆவணங்கள்** -Lien நடைமுறைக் கணக்கு விண்ணப்பப்படிவம் -Lien நடைமுறைக் கணக்கைத் திறப்பதற்கு CGF நிறுவனம் வழங்கியுள்ள கோரிக்கை கடிதம் -நிறுவனத்தின் வகையின் அடிப்படையில் தொடர்புடைய ஏனைய ஆவணங்கள். (உ+ம் – வியாபாரப் பதிவுச் சான்றிதழ்/கம்பனி பதிவு/ கணக்கைத் திறப்பதற்கான அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பகாரர்களுக்கான பணிப்பாளர் சபையின் தீர்மானம்/) • **நிதியை விடுவிப்பதற்குத் தேவையானவை** - கணக்கு உரிமையாளரின் எழுத்து மூல கோரிக்கை	• இக்கணக்கு “ ஒரு வாடிக்கையாளர் ஒரு கணக்கு” என்ற அடிப்படையில் கட்டாயமாகத் திறந்து பேணப்படும். • பற்றுரிமையாளரின் எழுத்து மூலமான முன்னனுமதி மற்றும் கணக்குரிமையாளரின் எழுத்து மூலமான கோரிக்கை என்பவற்றை பெற்றுக்கொண்ட பின்னரே பண மீளப்பெறல் அல்லது கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கப்படும். • கணக்குரிமையாளரின் அதே உரிமை/பெயரிலுள்ள கணக்கிற்கு கணக்குத் திறக்கப்பட்ட கிளையில் மட்டுமே பணப் பரிமாற்றங்களை நிறைவேற்றலாம். • கருமபீடத்தில் பணம் மீளப்பெற முடியாது. • கணக்குரிமையாளருக்கு மின்னஞ்சல் மூலமாகவும், பற்றுரிமையாளருக்கு மாதந்தோறும் தபால் மூலமாகவும் கணக்குக் கூற்றுகளை வழங்கப்படும். • **கணக்கை முடிவுறுத்தல்** **பின்வரும் சந்தர்ப்பங்களில் இக்கணக்கு முடிவுறுத்தப்படலாம்.** • கணக்குரிமையாளரின் இறப்பு, பங்குடமை முடிவு • கம்பனி கலைப்பு • வாடிக்கையாளரின் கோரிக்கை கணக்கினை முடிவுறுத்துவதற்கு முன்பு பற்றுரிமையாளரின்

			- CGF இன் எழுத்து மூல அனுமதி /உறுதிப்படுத்தல்	உறுதிப்படுத்தல் அவசியமாகும். இதன்போது கணக்கிலுள்ள மீதி பற்றுரிமையாளருக்கு மாற்றப்படும். வாடிக்கையாளரின் கணக்கிற்கு நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டால் வங்கி அதற்கமைய செயற்படவேண்டும்.

வைப்புக் காப்புறுதி காப்பீடு/அங்கீகரிக்கப்படாத (தவறாக) பரிவர்த்தனைகளை / செயலற்ற கணக்குகளை அறிக்கையிடல்

- அங்கீகரிக்கப்படாத/தவறான பரிவர்த்தனைகளை கண்டறியும்போது அவற்றை உடனடியாக வங்கிக்கோ அல்லது கணக்கினைப் பேணும் கிளைக்கோ அறிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு எவ்விதப் பண மீளப்பெறலும்/கொடுப்பனவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், அவ்வருடத்தின் நிறைவின்போது கணக்கு 'செயலற்றதாக' மாறும்.
- அத்தகைய கணக்குகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரம் ஏதும் இல்லை எனில் அந்தக் கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்படும்
- வாடிக்கையாளர்கள் பின்வரும் எந்தவொரு தெரிவுகள் ஊடாகவும் தங்களது கருத்துக்களையும் முறைபாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்.
- உங்களது பின்னூட்டங்களையும் முறைபாடுகளையும் எமது வாடிக்கையாளர் அனுபவ மேலாண்மைப் பிரிவின் ஊடாக பதிவு செய்யலாம். உங்களது கோரிக்கைகள் தானியங்கி முறைமை மூலம் முன்னுரிமையுடன் கருத்திற்கொள்ளப்படும்.

உங்களது பின்னூட்டத்தை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலை நகல் : +94 11 243 5815 மின்னஞ்சல்: bocexmgt@boc.lk வலைத்தளம்: https://www.boc.lk

தபால்: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22வது மாடி, இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எமது எந்தவொரு கிளையையும், சேவை பிரிவையும் அல்லது அழைப்பு மையத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

எமது உற்பத்திகள் அல்லது சேவைகள் பற்றிய உங்களது கருத்துகளை/விசாரணைகளை எமது கிளைகளுக்கோ அல்லது தொடர்பு மையத்திற்கோ அறிவிக்கலாம். உங்களுக்கு அருகிலுள்ள கிளையை 1975 என்ற எண்ணூடாக (அழைப்பு மையம்) அறிந்துகொள்ளலாம்.